


Land Transport Authority    Public Transport Council

# 3 ஜூலை 2010 முதல் தூர அடிப்படையிலான கட்டணங்கள்

16 ஜூன் 2010 முதல், உங்களது பேருந்து மற்றும் ரயில் கட்டணங்களை நீங்கள் துல்லியமாக புதிய கட்டண கணிப்பொறி மூலம் கணக்கிடலாம். உங்கள் பயணப் பாதையைத் திட்டமிட, நீங்கள் "பொதுப் போக்குவரத்து பயணத் திட்டமைப்பையும்" பயன்படுத்தலாம். நீங்கள் **www.publictransport.sg** இணையத்தளத்திற்குச் சென்றால் போதும்!
எப்போதும் ஏறும்போதும் இறங்கும்போதும் மறக்காமல் அட்டையைத் தட்டுங்கள்!




3 ஜூலை 2010 முதல், பயணிகள் அனைவருக்கும் பேருந்து, இலகு இரயில், பெருவிரைவு இரயில் ஆகியவற்றில் பயணம் செய்த தூரத்தின் அடிப்படையில் கட்டணம் விதிக்கப்படும். தூர அடிப்படையிலான கட்டணங்களுடன், உங்கள் பயணத்தின் ஒவ்வொரு பயண-மாறுதலுக்கும் கூடுதல் கட்டணம் விதிக்காமல், மொத்த பயண தூரத்தின் அடிப்படையில் கட்டணம் கணக்கிடப்படும். உங்கள் பயணத்தைத் திட்டமிடவும் கட்டணத்தைக் கணக்கிடவும் **www.publictransport.sg** இணையத்தளத்தின் "பயணத் திட்டமைப்பு" பகுதிக்குச் செல்லுங்கள்.

**ஏறும்போதும் இறங்கும்போதும் மறக்காமல் அட்டையைத் தட்டுங்கள்**
இறங்கும்போது நீங்கள் அட்டையைத் தட்ட மறந்தால் அதிகபட்சக் கட்டணம் விதிக்கப்படும்.




**16 ஜூன் 2010 முதல்**
**www.publictransport.sg**
இணையத்தளத்தின் கட்டணக் கணிப்பொறி மூலம் உங்கள் கட்டணத்தைத் தெரிந்துகொள்ளலாம்.




தூர அடிப்படையிலான கட்டணங்களுடன், ஒரே பயணத்தில் நீங்கள் **5** பயண-மாறுதல்கள் வரை செய்யலாம். உங்கள் பயணத்திற்கு எவ்வளவு செலவாகும் என்பதைக் கண்டறிய, **www.publictransport.sg** இணையத்தளத்திற்குச் சென்று **"Fare Calculator"** கணிப்பொறியைத் தேர்ந்தெடுக்கவும். அதில் "கட்டண வகை"**(Fare Type)**, அதன்பின்னர் "பயண முறை"**(Mode of Transport)** தேர்ந்தெடுத்து, வழிகாட்டியைப் பின்பற்றவும்.

தூர அடிப்படையிலான கட்டண முறையைப் பற்றி மேல்விவரம் அறிய:

| Land Transport Authority | SBS Transit | SMRT | TransitLink |
|---|---|---|---|
| 1800-CALL LTA (1800-225 5582) | 1800-287 2727 | 1800-336 8900 | 1800-225 5663 |
| www.lta.gov.sg | www.sbstransit.com.sg | www.smrt.com.sg | www.transitlink.com.sg |